## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

# 1993 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகார சபை (திருத்தச்) சட்டம்

*[1993, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*


அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1993, திசெம்பர் மாதம் 17 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 46 தபாற் செலவு : ரூபா 1.00

1993 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகார சபை (திருத்தச்) சட்டம்.

[1993, திசெம்பர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 56/93

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவை யடுத்து பின்வரும் பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டத்தின் 22அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தில் 22அ என்னும் பிரிவை உட் புகுத்துதல்.

"அமைச்சரின் சிறப்புத் தத்துவம்.

22அ. இச்சட்டத்தின் நிர்வாகம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர், ஏதேனும் விசேட இடப்பரப்பில் அல்லது அது தொடர்பில்—

(அ) காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவிற்கான காப்புவாசகத்தின் (ஆ) என்னும் பந்தியால் அமைச்சரொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களையும்;

(ஆ) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் 49 ஆம், 51 ஆம், 79 ஆம், 80 ஆம் பிரிவுகளால் அமைச்சரொருவருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களையும்; அத்துடன்

(இ) முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையால் அல்லது ஒழுங்குவிதியால் அமைச்சரொருவருக்கு அளிக்கப்பட்டதான அரச காணிகளின் விசேட மானியக்கொடைகளும் குத்தகைகளும் தொடர்பான தத்துவங்களையும்,

அத்தகைய பிரிவில், ஏற்பாட்டில், கட்டளையில், அல்லது ஒழுங்குவிதியில் "அமைச்சர்" என்பதுபற்றிய குறிப்பீடு, இச்சட்டத்தின் நிர்வாகம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர்பற்றிய குறிப்பீடொன்று என்றுற்போன்று, பிரயோகித்தல் அவ்வமைச்சருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்; அத்துடன் இப்பிரிவு வலுவிலிருக்கும் வரையும் அத்துடன் அதுவரை மட்டுமே, இச்சட்டத்தின் நிர்வாகம் எந்த அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரைத் தவிர வேறு அமைச்சர் எவரும் விசேட இடப்பரப்பு ஒன்றில் அல்லது அது தொடர்பில் அத்தகைய ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகித்தலாகாது.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின், சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.